கண்டுபிடிப்புகளுக்குப் பயன்படும். அதுவும் முழு அளவுக்கு நடத்துவதற்கான வாய்ப்பும் வசதியும் இல்லை. ஏற்படுத்தப் பட்டிருக்கிற அமைப்பின்மூலம் கிடைக்கின்ற பலன்கள், உண்மைகள் வேண்டுமானால் மருத்துவத் துறையின் வாயிலாகப் பரவக்கூடும்.

சேலம் மாவட்ட மருத்துவ மனையில் சிறப்புப் பிரிவுகள்

*7 வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரசினர் மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit, Cancer Treatment Care Unit போன்ற சிறப்புப் பிரிவுகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சேலம் மாவட்ட மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் Cancer Treatment Care Unit தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

Metropolitan Land Bank.

*8 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether the Seminar on Metropolitan Development Planning at its meeting around January 1975 have decided to recommend to the State Government to open a Metropolitan Land Bank; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) சென்னையில் 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6, 7-ஆம் நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னை-செங்கற்பட்டு வட்டார வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து நடைபெற்ற கருத்தரங்கில் பல பரிந்துரைகள் வழங்கப் பட்டன. பெருமளவில் நிலத்தைக் கையகப்படுத்துதல், அந்நிலத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் பொருட்டு நில மேம்பாட்டு வங்கி ஒன்றை ஏற்படுத்த சென்னை

1975 அக்டோபர் 23]

பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடம் ரூபாய் ஐந்து கோடி அடிப்படை மூலதனமாக முதற்கண் வைத்திட வேண்டுமென்பது இதில் செய்யப்பட்ட பரிவுரைகளில் ஒன்றாகும். இதுகுறித்து திட்டவட்டமான செயற்குறிப்பு எதுவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடமிருந்து அரசுக்கு இதுவரை வந்து சேரவில்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister when this scheme of opening a Metropolitan Land Bank will be implemented ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதற்கான அடிப்படையான ஆலோசனைகளே நடைபெறவில்லை. ஒரு கருத்தரங்கில் பேசப்பட்ட, சொல்லப்பட்ட ஆலோசனைதான் அது. ஆனால் இந்த வங்கி ஏற்படுத்தப்படாவிட்டாலும், எங்கெங்கு பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு வாய்ப்பிருக்கிறதோ அவற்றின் தனித்தனி வளர்ச்சிக்கு, மணலி, எண்ணூர் போன்ற இடங்களில், இப்படி எங்கெங்கு ஏற்படுத்தப்படுகிறதோ அந்த இடங்களில் லேண்ட் அக்விசிஷன் எந்த அளவிற்குச் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்வதற்கான நிதியைப் பெறுவதற்கு இந்தப் பெருநகர் வளர்ச்சி மன்றம் முயற்சிக்கிறது.

வீரக்கல்புதூர் நீர் வழங்கு திட்டம்

***9 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தாலுக்கா பி. என். பட்டி வீரக்கல்புதூர் குடிநீர் வழங்கு திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேட்டூர் தாலுக்கா பி. என். பட்டி வீரக்கல்புதூர் குடிநீர் வழங்கு திட்டத்திற்கு அரசு ஜனவரி 1975-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வருகிற 1976-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமுலுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டிருக்கிறது.